1980 பிப்ரவரி 7]

காப்பி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் உள்ள குறைந்த பட்ச ஊதிய வித்தியாசத்தை நீக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. அதன்படி 18-11-1976 ம் நாளிட்ட அரசு ஆணை எண். 1016இல் குறைந்த பட்ச ஊதியம் மறுமுறை திருத்தி அமைக்கப்பட்டது. பிறகு தொழிலாளர் நல ஆணையரின் 21-9-77ம் நாளிட்ட அறிவிக்கையில் பஞ்சப்படி வாழ்க்கைத் தர புள்ளிக்குத்தக்கவாறு அரசுஆணையில் கூறியபடி குறைக்காமல் கொடுக்க வேண்டும் என அறிவித்ததின் பேரில் சில மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுவை தாக்கல் செய்தனர். உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் தொழிலாளர் நல ஆணையரின அறிவிக்கையை தள்ளுபடி செய்து அரசால் மாற்றி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள் செல்லாது என தீர்ப்பளித்துவிட்டது.

2. எனவே ஊதிய விகிதங்களை மறுபடியும் மாற்றியமைத்து எல்லா காப்பி தேயிலைத் தோட்டப் பகுதிகளுக்கும் அது பொருந்தும்படி செய்வது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அம்பத்தூர், வில்லிவாக்கம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல்.

*வினா எண். 97—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பத்தூர் நகரியப் பகுதிகளுக்கும் வில்லிவாக்கம் நகருக்கும் குடிநீர் வழங்குவதற்காக வகுக்கப்பட்ட 'குடத்தலையாறு திட்டம்' நிறைவேற்றப்படாமல் இருக்கக் காரணம் யாது?

(ஆ) அப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர் பஞ்சத்தைப் போக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) போதுமான நீர் ஆதாரம் கிடைக்காததால், திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) சென்னைப்பெருநகரில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கும் குறிப்பு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது. இடைக்காலத்தில் சென்னை மாநகராட்சியைச் சார்ந்த வில்லிவாக்கம் பகுதியில் அதிக தட்டுப்பாடுள்ள இடங்களில் இரும்பு நீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு லாரிகள் மூலம் நீர் நிரப்பப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகக் கூறியிருக்கிறேன். போதுமான அளவில் இரும்புத் தொட்டிகள் வைக்கப்பட

வில்லை என்பது ஒன்று. வைக்கப்பட்ட இரும்புத் தொட்டிகளில் தண்ணீர் இல்லை என்பது இரண்டு, முறையாக விநியோகிக்கப்படவில்லை என்பது மூன்று. இந்த மூன்று குற்றச்சாட்டுகள் இருக்கின்ற காரணத்தினால், திரும்பத் திரும்ப அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இதிலே கவனம் செலுத்தி வில்லிவாக்கம் பகுதியில் போதுமான இரும்பு நீர்த் தொட்டிகளை தாற்காலிகமாக வைக்க வேண்டும். அவைகளிலே முறையாக நீர் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

ஹோமியோபதி பயிற்சி பெற்ற டாக்டர்கள்

*வினா எண். 98— திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் Homoeopathy Medical Council லால் நடத்தப்படும் அரசாங்க தேர்வில் வெற்றிபெற்று பதிவு செய்துள்ள ஹோமியோபதி டாக்டர்கள் எத்தனைப் பேர்கள்?

(ஆ) ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில்—ஹோமியோபதி டாக்டர்களை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். செளந்திரராஜன்:

(அ) 'ஏ' பிரிவு 109

'பி' பிரிவு 12,865

தேர்வில் வெற்றிபெற்று 'சி' பிரிவு மருத்துவர்களாக பதிவு பெற்றவர் 2,215

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அப்படித் தேர்வு பெற்றவர்கள் கிராமங்களில் மருத்துவ வசதியை மக்களுக்கு வீடுகளுக்குச் சென்று செய்து கொடுப்பதுபற்றி இந்த அரசின் பரிசீலனையில் இருப்பதை சற்று வேகப்படுத்தி, அவர்கள் பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை அரசு பரிசீலிக்கும்.